AL/2020/47/T-I (NEW)

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය I
இஸ்லாமிய நாகரிகம் I
Islamic Civilization I

47 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
- **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** ஜாஹிலிய்யாக் காலத்தில் கஃபாவைப் பரிபாலித்தல் என்ற விடயம் எப்பெயர் கொண்டு அழைக்கப்பட்டது?
(1) ஸிகாயா (2) லிவா (3) ஹிஜாபா
(4) ரிபாதா (5) நத்வா

**2.** அபூ உஸ்மான் தலைமையிலான வர்த்தகத் தூதுக்குழு இலங்கையின் எந்த ஆட்சிக் காலப்பகுதியில் எகிப்துக்கு அனுப்பப்பட்டது?
(1) கம்பளை (2) யாப்பகுவ
(3) அநுராதபுரம் (4) பொலன்னறுவை
(5) கண்டி

**3.** இஸ்லாம் மனிதன் மீது சுமத்தியுள்ள பொறுப்புக்களைச் சுட்டும் தொகுதி
(1) இபாதத், ஹிக்மத், நுஸ்ரத், ஆகும். (2) இபாதத், இமாரத், கிலாபத், ஆகும்.
(3) ரிஸாலத், இஸ்மத், வகாலத், ஆகும். (4) தௌஹீத், ரிஸாலத், மஆத், ஆகும்.
(5) இமாரத், இஜாரத், ஸிகாயத், ஆகும்.

**4.** இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் எழுதிய பிரபல்யமான பிக்ஹு நூல் யாது?
(1) மஸாஇல் ஸாலிஹ் (2) கிதாபுர் ரிஸாலா
(3) முகத்திமா (4) புதூகுல் ஐப்
(5) பிக்ஹுல் கபீர்

**5.** இலங்கையின் வெலிகமவில் அமைக்கப்பட்டுள்ள 'மத்ரஸதுல் பாரி' இன் ஸ்தாபகர் யார்?
(1) முபாரக் மௌலானா ஆவார்.
(2) ஷெய்கு முஸ்தபா வலியுல்லாஹ் ஆவார்.
(3) மாப்பிள்ளை லெவ்வை ஆலிம் ஆவார்.
(4) அல்-பாதிப் அல்-யமானி ஆவார்.
(5) கசாவத்தை ஆலிம் சாஹிப் ஆவார்.

**6.** ஹுதைபிய்யா உடன்படிக்கை கைச்சாத்தான வேளையில் மக்காவிலிருந்து மதீனாவுக்கு வந்த ஒரு ஸஹாபியை குறைஷியர் மீண்டும் மக்காவுக்கே அழைத்துச் சென்றனர். அந்த ஸஹாபி
(1) அபூ ஜன்தல் (ரழி) ஆவார். (2) அபூ ஸஈத் அல் குத்ரி (ரழி) ஆவார்.
(3) அப்துர் ரஹ்மான் பின் அவ்ப் (ரழி) ஆவார். (4) ஸஃது பின் அபீவக்காஸ் (ரழி) ஆவார்.
(5) மஆத் பின் ஜபல் (ரழி) ஆவார்.

[பக். 2 ஐப் பார்க்க

**7.** பின்வருவனவற்றுள் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் அல்குர்ஆன் விரிவுரையாளர்களுள் ஒருவராவார்.
(2) தீனே இலாஹி என்ற சிந்தனையை மொகலாய மன்னன் பாபர் முன்வைத்துள்ளார்.
(3) மருத்துவ அறிஞர் இப்னு நபீஸ் குருதிச் சுற்றோட்டம் பற்றிக் கருத்துப்பரிமாறியுள்ளார்.
(4) அகபா உடன்படிக்கை நபியவர்களுக்கும் மக்காவாசிகளுக்குமிடையே இடம்பெற்றதாகும்.
(5) இஸ்லாமிய நாகரிகம் அரேபிய கலாசாரத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

**8.** பின்வருவனவற்றுள் பலமான ஆதாரம் கொண்ட ஹதீஸாக அமைவது
(1) ஹதீஸ் மஷ்ஹூர் (2) ஹதீஸ் முதவாதிர் (3) ஹதீஸ் மர்பூஉ
(4) ஹதீஸ் ஸஹீஹ் (5) ஹதீஸ் முர்ஸல்

**9.** முஸ்தபா கமாலினால் பதவி கவிழ்க்கப்பட்ட கடைசி உஸ்மானிய ஸுல்தான்,
(1) ஸுல்தான் முராத் ஆவார். (2) ஸுல்தான் ஸலாஹுத்தீன் ஆவார்.
(3) ஸுல்தான் ஸலீம் ஆவார். (4) ஸுல்தான் அப்துல் ஹமீத் ஆவார்.
(5) ஸுல்தான் முஹம்மது அல்-பாதிஹ் ஆவார்.

**10.** ஸாஹிபுஸ்ஸிர் என அழைக்கப்பட்ட நபித் தோழர்
(1) அலி (ரழி) ஆவார் (2) ஹுதைபதுல் யமானி (ரழி) ஆவார்
(3) முஆவியா (ரழி) ஆவார் (4) ஹஸன் (ரழி) ஆவார்
(5) அபூ மூஸா அல்-அஷ்அரி (ரழி) ஆவார்

**11.** பின்வருவோருள் அல்-குர்ஆனுக்கு விளக்கவுரை எழுதிய இருவரைச் சுட்டும் தொகுதியைத் தெரிவுசெய்க.
(1) பஹ்ருத்தீன் அர்ராஸி (ரஹ்), - புழைல் பின் இயாழ் (ரஹ்)
(2) இமாம் ஷாஹ்வலியுல்லாஹ் (ரஹ்), - இமாம் அப்துல் வஹ்ஹாப் (ரஹ்)
(3) மௌலானா இல்யாஸ் (ரஹ்), - மௌலானா மௌதூதி (ரஹ்)
(4) இமாம் இப்னு தைமியா (ரஹ்), - இமாம் புஹாரி (ரஹ்)
(5) இமாம் இப்னு கஸீர் (ரஹ்), - ஷஹீத் செய்யத் குத்ப் (ரஹ்)

**12.** இலங்கை முஸ்லிம்களின் ஆரம்பக் கரையோரக் குடியேற்றங்களைக் காட்டும் சரியான தெரிவு யாது?
(1) திருகோணமலை, அம்பாந்தோட்டை, புத்தளம், மன்னார் என்பனவாகும்.
(2) கொழும்பு, பேருவளை, அம்பாந்தோட்டை, பொத்துவில் என்பனவாகும்.
(3) யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, கற்பிட்டி என்பனவாகும்.
(4) மன்னார், பேருவளை, கொழும்பு, புத்தளம் என்பனவாகும்.
(5) பேருவளை, மட்டக்களப்பு, கற்பிட்டி, பொத்துவில் என்பனவாகும்.

**13.** இமாம்களான முஸ்லிம் (ரஹ்), அபூ தாவூத் (ரஹ்) ஆகியோரின் பிறப்பிடங்களைச் சுட்டும் இடங்கள் முறையே
(1) புஹாரா - ஸமர்க்கந்து
(2) நைஸாபூர் - ஸிஜிஸ்தான்
(3) நைஸாபூர் - புஹாரா
(4) கஸ்வின் - ஸமர்க்கந்து
(5) குராஸான் - ஸிஜிஸ்தான்

**14.** மக்காவில் சிலை வணக்கத்தை அறிமுகப்படுத்தியவரின் பெயர் யாது?
(1) அம்ர் பின் ஹழ்ரமி (2) உபை பின் ஸலூல் (3) உமையா பின் ஹலப்
(4) அபூ ஜஹ்ல் (5) அம்ர் பின் லுஹை

**15.** மதீனா சாசன நிபந்தனைகளுள் ஒன்று
(1) நபியவர்களின் தலைமைத்துவத்தை அனைவரும் அங்கீகரித்தலாகும்.
(2) பத்து வருடங்களுக்கு யுத்தத்தை நிறுத்திக் கொள்வதாகும்.
(3) மதீனாவைவிட்டு வெளியேறாமல் இருப்பதாகும்.
(4) பெரும்பாவங்களை செய்யாமல் இருப்பதாகும்.
(5) மூன்று வருடங்களின் பின் உம்ராவுக்காக மக்கா செல்ல அனுமதித்தலாகும்.

[பக். 3 ஐப் பார்க்க

**16.** பின்வரும் கூற்றுகளுள் இஸ்லாமிய நாகரிகத்தின் சிறப்புப் பண்பாக அமையும் கூற்றைத் தெரிவுசெய்க
(1) இம்மை வெற்றியை இலக்காகக் கொண்டுள்ளமை
(2) முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் இடங்களுக்கு மட்டும் பொருத்தமாக அமைந்துள்ளமை
(3) பகுத்தறிவுக் கோட்பாடுகளில் தங்கியுள்ளமை
(4) இம்மை, மறுமை வெற்றியை இலக்காகக் கொண்டுள்ளமை
(5) நெகிழாத் தன்மையுடைய, இறுக்கமான விதிகளை மாத்திரம் கொண்டுள்ளமை

**17.** பின்வருவனவற்றுள் அபூ மூஸா அல்-அஷ்அரி (ரழி) அவர்கள் சம்பந்தமான சரியான கூற்று யாது?
(1) தூமதுல் ஜன்தல் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது அலி (ரழி) இன் பிரதிநிதியாகச் செயற்பட்டவர்.
(2) ஹுதைபிய்யா உடன்படிக்கையின் போது நபியவர்களின் எழுத்தாளராகப் பணியாற்றியவர்.
(3) அகபா உடன்படிக்கையின் போது மதீனாவாசிகளின் தலைவராக இருந்தவர்.
(4) எகிப்தை வெற்றிகொண்டு அதனை இஸ்லாமிய சாம்ராஜ்யத்தோடு இணைத்தவர்.
(5) கந்தக் யுத்தத்தின் போது நபியவர்களுடன் நிபுணத்துவ அறிவுரைகளைப் பரிமாறியவர்.

**18.** 'தல அல் பத்ரு அலைனா' என்ற பாடலுடன் நபியவர்கள் வரவேற்கப்பட்ட சந்தர்ப்பம் யாது?
(1) மக்கா வெற்றி (2) மதீனா பிரவேசம் (3) ஹஜ்ஜதுல் விதா
(4) பத்ர் வெற்றி (5) தாயிப் நகர் பிரவேசம்

**19.** பின்வருவனவற்றுள் மிகச் சரியான கூற்றினைத் தெரிவுசெய்க
A - தப்ஸீர் எனும் சொல்லைப் போன்றே த.்.வீல் எனும் சொல்லும் அல்குர்ஆனின் விளக்கவுரையுடன் தொடர்புபடுகின்றது.
B - நாடுகாண் பயணி கொலம்பஸ் இந்தியாவுக்கு வருவதற்கு வழிகாட்டியாக இருந்தவர் இப்னு மாஜித் ஆவார்.
C - நபியவர்கள் காலத்தில், தப்ஸீர் கலை தனிக்கலையொன்றாக உருவாக்கம் பெற்றிருந்தது.
D - ஹிஜ்ரத்தின் பின் நபியவர்கள் முஹாஜிரீன்கள், அன்ஸாரீன்கள் இடையே சகோதரத்துவ உறவை ஏற்படுத்தினார்கள்.
(1) A B (2) A D (3) B C (4) B D (5) C D

**20.** கி.பி.15 ஆம் நூற்றாண்டு முதல் 18 ஆம் நூற்றாண்டு வரை ஐரோப்பிய மருத்துவக் கல்லூரிகளில் பாடநூலாகப் பயன்படுத்தப்பட்ட முஸ்லிம் அறிஞர் ஒருவரால் எழுதப்பட்ட நூல்
(1) அல் - ஹாவி (2) கிதாபுத்தைஸீர் (3) அல் - கானூன்
(4) அத் - தப்ஸீர் (5) கிதாபுல் இக்திஸாத்

**21.** பின்வரும் கூற்றுகளைக் கருதுக.
A - இஸ்லாம், இபாதத்துக்களோடு மட்டும் மட்டுப்படுத்திக் கொண்டமை இஸ்லாமிய நாகரிகத்தின் தேக்க நிலைக்குக் காரணமொன்றாக அமைந்தது.
B - தீனைப்பாதுகாத்தல், பரம்பரையை பாதுகாத்தல், செல்வத்தைப் பாதுகாத்தல் முதலியனவும் ஹாஜிய்யாத் என்ற பகுதியில் உள்ளடங்குகின்றன.
C - மதீனாவில் நபிகளார் காலத்தில் முஸ்லிம்கள், யூதர்கள், முஷ்ரிக்குகள் அனைவரும் தங்களுக்கிடையே கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்டனர்.
D - நபியவர்களுக்கு அல்-அமீன், அல்-ஸாதிக் எனும் சிறப்புப் பெயர்கள் நுபுவ்வத்தின் பின்னரே கிடைக்கப்பெற்றன.
மேற்குறித்தவற்றுள் சரியான கூற்றுகளை மாத்திரம் கொண்ட தெரிவு யாது?
(1) A B (2) A C (3) B C
(4) B D (5) C D

[பக். 4 ஐப் பார்க்க

**22.** பின்வருவன அகீதா அடிப்படையில் அமைந்த சிந்தனைப் பிரிவுகளின் கருத்துக்கள் சிலவாகும்.
A - பெரும்பாவம் செய்தவனை அல்லாஹ், விரும்பினால் மன்னிப்பான் அல்லது தண்டிப்பான்.
B - அல்லாஹ் உதாரணத்துக்கும், ஒப்புவமைக்கும் அப்பாற்பட்டவன் ஆவான்.
C - அல்லாஹ்வின் தாத்தும், ஸிபத்தும் வெவ்வேறானவை.
D - இமாம்கள் தவறு செய்வதிலிருந்து பாதுகாப்புப் பெற்றவர்கள்.
E - விதிக்கப்பட்ட நேரத்தில் மறுமை நிகழும், அப்போது மனிதர்கள் கபுறுகளிலிருந்து எழுப்பப்படுவர்.
மேற்குறித்தவற்றுள் அஷ்-அரியாக்களின் கருத்துக்களை மாத்திரம் சுட்டும் தொகுதி யாது?
(1) A C E (2) A B D (3) B C D (4) B D E (5) C D E

பின்வருவன முஸ்லிம்களிடையே பிரபல்யமாகவுள்ள அறபுச் சொற்கள் சிலவாகும். அவற்றை அடிப்படையாகக் கொண்டு **23** தொடக்கம் **25** வரையான வினாக்களுக்கு விடை தருக.

A - தக்லீத் B - முரீத் C - இஜ்மா
D - முஹாஸபா E - ஸஹீஹ் F - ஹுகும்
G - மதன் H - முஜாஹதா I - இஸ்தி.ஃபார்
J - ஹல்கா K - பர்உ L - இஜ்திஹாத்

**23.** பிக்ஹுக் கலையுடன் தொடர்புடைய தொகுதியினைத் தெரிவுசெய்க
(1) A I (2) A L (3) C J
(4) F I (5) J L

**24.** ஹதீஸ் கலையுடன் தொடர்புபடும் தொகுதியினைத் தெரிவுசெய்க
(1) A B (2) C D (3) E G
(4) F J (5) K F

**25.** கியாஸ் சட்டப்பிரிவின் இரண்டு கூறுகளைக் காட்டும் தொகுதி
(1) A C (2) C D (3) E F
(4) F K (5) J K

**26.** கிலாபத்தின் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தினார் எனக் காரணம் காட்டப்பட்டு கலீபா உஸ்மான் (ரழி) அவர்களால் நாடுகடத்தப்பட்ட ஸஹாபியின் பெயரும், கடத்தப்பட்ட இடமும் முறையே
(1) ஸ.ஃது இப்னு உபாதா (ரழி) - நஹ்ர்வான்
(2) அபூதர் அல் கிபாரி (ரழி) - ரபாதா
(3) ஜ.ஃபர் பின் அபீதாலிப் (ரழி) - ஹபஷா
(4) அம்மார் பின் யாஸிர் (ரழி) - கூபா
(5) முஆவியா பின் அபீ சுப்யான் (ரழி) - ஷாம்

**27.** இஸ்லாமிய நாகரிகத்தின் தோற்றத்துக்கு அடிப்படையாக அமைந்த அம்சங்களை மாத்திரம் சுட்டும் தொகுதியாக அமைவது
(1) ரிஸாலத் - ஸீரா - இமாமத்
(2) இபாதத் - கிலாபத் - இமாரத்
(3) தௌஹீத் - ரிஸாலத் - மஆத்
(4) இஸ்மத் - தஸ்கியத் - விலாயத்
(5) தௌஹீத் - ஸீரா - இமாரத்

**28.** 'அஹ்லுத் தௌஹீத் வல் அத்ல்' என அழைக்கப்படுவோர் யாவர்?
(1) ஏகத்துவவாதிகள் (2) மு.ஃதஸிலாக்கள் (3) நாஸ்திகர்கள்
(4) நபிகளாரின் குடும்பத்தினர் (5) மத்ஹபுகளைப் பின்பற்றுவோர்

[பக். 5 ஐப் பார்க்க

**29.** பின்வரும் அட்டவணை இஸ்லாமிய ஷரீஆவின் சிறப்பம்சங்களை எடுத்துக்காட்டுகிறது.

| X | Y |
|---|---|
| i. ரப்பானிய்யா | A. சர்வதேச மயமானது |
| ii. ஷுமூலிய்யா | B. பொதுத்தன்மை கொண்டது |
| iii. வஸதிய்யா | C. தெய்வீகத்தன்மை வாய்ந்தது |
| iv. ஆலமிய்யா | D. நடுநிலைத்தன்மை வாய்ந்தது |
| v. உமூமிய்யா | E. பரிபூரணத்தன்மை வாய்ந்தது |

மேற்குறித்தவற்றுள் **X** நிரலில் உள்ள அறபுச் சொற்களுக்கு **Y** நிரலிலுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தும்போது பொருத்தமாக அமையும் தெரிவு

(1) A B E D C (2) A C B E D (3) B A C D E
(4) C E D A B (5) C D A B E

**30.** பின்வரும் **"X"** நிரலுக்கு ஏற்ப **"Y"** நிரலிலுள்ள சொற்களை சரியாக ஒழுங்குபடுத்தும்போது பொருத்தமாக அமையும் விடைத்தொகுதியினை தெரிவு செய்க.

| | X | Y |
|---|---|---|
| 1. | அல்-ஹாவி | A. அலி பின் ஸீனா |
| 2. | தாரீக் தமத்துன் | B. இப்னு அப்திரப்பிஹ் |
| 3. | இக்துல் பரீத் | C. ஜுர்ஜி ஸைதான் |
| 4. | அல்-கானூன் | D. அல்-மஜூஸி |
| 5. | கிதாபுல் மாலிக் | E. ஸகரிய்யா-அர் ராஸி |

(1) A B E D C (2) A C B E D (3) C B E A D
(4) E B A D C (5) E C B A D

**31.** பின்வருவனவற்றுள் 'இல்முல் ஜரஹ் வத்த.'.தீல்' எக்கலையுடன் தொடர்புடையது?

(1) பிக்ஹு (2) ஹதீஸ் (3) புவியியல்
(4) தஸவ்வுப் (5) வானியல்

**32.** இலங்கையின் பல பாகங்களிலும் ஸாஹிராக் கல்லூரியின் கிளைகள் பல உருவாவதற்குக் காரணமாக இருந்த பிரமுகர் யார்?

(1) கலாநிதி T.B ஜாயா (2) கலாநிதி பதியுதீன் மஹ்மூத்
(3) கலாநிதி A.M.A அஸீஸ் (4) டாக்டர் M.C.M கலீல்
(5) ஸேர் ராஸிக் பரீத்

**33.** ஹுதைபிய்யா உடன்படிக்கையைத் தொடர்ந்து உரோம மன்னருக்கு நபிகளாரின் கடிதத்தை எடுத்துச் சென்ற ஸஹாபி

(1) அப்துல்லாஹ் பின் ஜஹ்ஷ் (ரழி) ஆவார். (2) ஸைத் பின் தாபித் (ரழி) ஆவார்.
(3) ஹாரிஸ் பின் உமைர் (ரழி) ஆவார். (4) அபூ ஹுஸைமா அல்-அன்ஸாரி (ரழி) ஆவார்.
(5) ஸ.'.த் பின் உபாதா (ரழி) ஆவார்.

**34.** நுஸைரி என அழைக்கப்படுவது

(1) ஷீஆக்களின் ஒரு பிரிவினரையாகும்.
(2) மு.'.தஸிலாக்களின் ஒரு பிரிவினரையாகும்.
(3) காரிஜீக்களின் ஒரு பிரிவினரையாகும்.
(4) ஸ்பெயினில் இருந்த முஸ்லிம் சிற்றரசுகளில் ஒன்றையாகும்.
(5) இந்தியாவில் இருந்த முஸ்லிம் சிற்றரசுகளில் ஒன்றையாகும்.

[பக். 6 ஐப் பார்க்க

**35.** பின்வருவனவற்றுள் அறபு எழுத்தணி வகைகளை மட்டும் குறிப்பிடும் சேர்மானத்தை தெரிவுசெய்க
(1) அர்-ரிகா, அல்-முத்ஆ, அல்-முஹக்கிக்
(2) நஸ்தலிக், தவ்கி, ஸீனத்
(3) கூபி, நஸ்கு, ஸுலுஸி
(4) அல்-முஹக்கிக், றைஹானி, மிஸ்மார்
(5) றைஹானி, மிஸ்மார், கத் பாபுரி

**36.** பின்வரும் ஆளுமைகளுள் தஜ்தீத் பணியின் முன்னோடியாக அமைந்த நபர்
(1) இமாம் அப்துல்லாஹ் பின் ஸுஹ்ரி (ரஹ்) ஆவார்.
(2) கலீபா உமர் பின் அப்துல் அஸீஸ் (ரஹ்) ஆவார்.
(3) மௌலானா ஷாஹ் வலியுல்லாஹ் (ரஹ்) ஆவார்.
(4) இமாம் புழைல் பின் இயாழ் (ரஹ்) ஆவார்.
(5) இமாம் கஸ்ஸாலி (ரஹ்) ஆவார்.

**37.** இலங்கைப் பாராளுமன்றத்தில் சபாநாயகராகக் கடமையாற்றிய முஸ்லிம்கள் இருவர்
(1) எஸ்.எச். இஸ்மாயில் - பாக்கீர் மாகார் ஆவர்.
(2) கலாநிதி பதியுதீன் மஹ்மூத் - டாக்டர் எம்.ஸி.எம். கலீல் ஆவர்.
(3) கலாநிதி டி.பி.ஜாயா - எம்.எச்.எம். அஷ்ரப் ஆவர்.
(4) எம்.எச்.முஹம்மத் - ஏ.ஸீ.எஸ் ஹமீத் ஆவர்.
(5) எம்.எல். அபூஸாலி - எம்.எச். நைனா மரிக்கார் ஆவர்.

**38.** அல்-குர்ஆனை இனிய குரலில் ஓதியமைக்காக நபியவர்களால் பாராட்டப்பட்ட ஸஹாபியின் பெயர் யாது?
(1) அபூ மூஸா அல் - அஷ்அரீ (ரழி)
(2) அபூ தர் அல் - கிப்பாரி (ரழி)
(3) அபூ ஸஈத் அல் - குத்ரி (ரழி)
(4) அபூ ஐயூப் அல் - அன்ஸாரி (ரழி)
(5) அபூ உபைதா அல் - ஜர்ராஹ் (ரழி)

**39.** பின்வருவோருள் அல்-குர்ஆனை ஆங்கிலத்துக்கு மொழி பெயர்த்தவர்
(1) மல்கம் ஆவார். (2) பிக்தால் ஆவார். (3) கட்ஸ்டீவன் ஆவார்.
(4) மார்டின் லிங்க்ஸ் ஆவார். (5) மோரிஸ் புகைல் ஆவார்.

**40.** முஜ்தஹித்கள் இடையே கருத்து வேறுபாடுகள் தோன்றுவதானது
(1) கட்டாயமானதாகும். (2) பிழையானதாகும். (3) தவிர்க்க முடியாததாகும்.
(4) தண்டனைக்குரியதாகும். (5) சாத்தியமற்றதாகும்.

**41.** கியாஸ் என்ற துணை மூலாதாரம் தொடர்பான மிகச்சரியான கூற்று
(1) ஹதீஸ்களில் மட்டும் தங்கியிருக்கின்றமை.
(2) பகுத்தறிவை ஆதரிக்கின்றமை
(3) முஜ்தஹிதுகள் அனைவரதும் அங்கீகாரத்தை வேண்டி நிற்கின்றமை
(4) இமாம்களின் மௌன அங்கீகாரத்தைப் போதுமாக்கிக் கொள்கின்றமை
(5) இபாதத், முஆமலாத் அனைத்திலும் பிரயோகப்படுத்த ஏதுவாக உள்ளமை

**42.** பின்வரும் கூற்றுகளுள் மிகச் சரியான கூற்றுகளைத் தெரிவுசெய்க
A - "இலஞ்சம் வாங்குபவருக்கும் இலஞ்சம் கொடுப்பவருக்கும் அல்லாஹ்வின் சாபம் உண்டு" என்பது இமாம்களின் கருத்தாகும்.
B - "செல்வம் ஒரு சிலரின் கைகளில் மாத்திரம் தேங்கி நிற்காது. அது மக்களிடையே சுழன்று வரும் ஒன்றாக இருக்கவேண்டும்" என்பது இஸ்லாத்தின் கருத்தாகும்.
C - மதீனா சாசனம் மூலம் நபியவர்களின் தலைமைத்துவம் அங்கீகாரம் பெற்றதுடன் மதீனாவில் வாழ்ந்த அனைத்து மக்களதும் உரிமைகள் உறுதி செய்யப்பட்டன.
D - "குழந்தைகளைக் கொலை செய்வதில்லை" என்ற நிபந்தனை ஹுதைபிய்யா உடன்படிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தது.
(1) A B (2) A C (3) A D
(4) B C (5) C D

[பக். 7 ஐப் பார்க்க

**43.** தனது இரணம் விரிவுபடுத்தப்பட வேண்டும் எனவும், ஆயுள் நீடிக்கப்பட வேண்டும் எனவும் விரும்புகின்றார்களோ, அவர்கள் இணைந்து நடக்க வேண்டும் என நபியவர்களால் குறிப்பிடப்பட்டவர்கள் யாவர்?

(1) முதியவர்கள் (2) அண்டை அயலவர்கள் (3) இரத்த உறவினர்
(4) சிறியவர்கள் (5) முஸ்லிம்கள்

**44.** பின்வரும் சட்ட மூலாதாரங்களுள் இஸ்திஹ்ஸான் முடிவைப் பெறுவதற்குத் துணை செய்யும் சட்டத் தொகுதியினைத் தெரிவுசெய்க.

(1) கியாஸ், உர்பு, மஸ்லஹா
(2) கவ்லுஸ் ஸஹாபா, உர்பு, சத்துத் தரீஆ
(3) கியாஸ், மஸ்லஹா, கௌலுஸ் ஸஹாபா
(4) உர்பு, சத்துத் தரீஆ, ஷரஉ மன் கப்லனா
(5) மஸ்லஹா, சத்துத் தரீஆ, கவ்லுஸ் ஸஹாபா

**45.** மொகலாய ஆட்சியாளர் ஔரங்கஸீப் அவர்களின் காலத்தில் தொகுக்கப்பட்ட இஸ்லாமிய சட்ட நூல்

(1) பதாவா இப்னு தைமியா (2) தொழுகை அடவு
(3) பத்ஹுத் தையான் (4) பதாவா முஆஸரா
(5) பதாவா ஆலம் கீரி

- **46** தொடக்கம் **50** வரையிலான ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுகள் வீதம் தரப்பட்டுள்ளன. அக்கூற்றுகள் பற்றிய மிகப் பொருத்தமான தொடர்பைக் காட்டும் சரியான விடையினைப் பின்வரும் அட்டவணையிலுள்ள இலக்கம் (1), (2), (3), (4), (5) என்பவற்றிலிருந்து தெரிவுசெய்க.

| இலக்கம் | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| (1) | சரியானது | சரியானது |
| (2) | சரியானது | பிழையானது |
| (3) | பிழையானது | பிழையானது |
| (4) | பிழையானது | சரியானது |
| (5) | சரியானது | சரியானதாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாம் கூற்று | இரண்டாம் கூற்று |
|---|---|---|
| **46.** | பானத்ஸுஆத் எனும் பாடலைப் பாடிய கவிஞர் ஸுஹைல், நபிகளாரின் பாராட்டுக்களைப் பெற்ற ஒருவராவார். | இஜ்மாவை மேற்கொள்ள ஒன்றுக்கு மேற்பட்ட முஜ்தஹித்கள் இருக்க வேண்டுமென்பது ஒரு நியதியாகும். |
| **47.** | இமாம் ஜஃபர் பின் ஸாதிகின் புதல்வர் இமாம் இஸ்மாயீல் என்பவரைப் பின்பற்றுவோர் இஸ்மாயீலிய்யாக்கள் ஆவர். | அஹ்மரினால் ஸ்பெய்னிலுள்ள அல்-ஹம்ரா மாளிகை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. |
| **48.** | அமர்வதற்கு இயைந்து கொடுக்கக்கூடிய கதிரை போன்றதே கருத்து வேறுபாடு என்று முஸ்தபா அஹமத் ஸர்க்கா குறிப்பிட்டுள்ளார்கள். | ஹதீஸ்களைத் திரட்டும் பணியில் கலீபா மூஆவியா (ரழி) அவர்களால் இமாம் ஸுஹ்ரி (ரஹ்) அவர்கள் ஈடுபடுத்தப்பட்டார்கள். |
| **49.** | நன்மையை ஏவித் தீமையைத் தடுக்கும் விடயத்தில் ஆண்களும் பெண்களும் சமபங்கு உடையவர்கள் என்பதே இஸ்லாத்தின் கருத்தாகும். | தஜ்தீத் பணிகள் கூட்டாகவும் தனியாகவும் இடம் பெற முடியும். |
| **50.** | அலி (ரழி) அவர்கள் நஜ்ரான் பிரதேச கிறிஸ்தவர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கையே நஜ்ரான் ஒப்பந்தம் என அழைக்கப்படுகிறது. | ஆயிஷா (ரழி) ஹப்ஸா (ரழி) இருவரும் முறையே கலீபாக்களான அபூபக்கர் (ரழி) உமர் (ரழி) ஆகியோரின் புதல்விகளாவர். |

* * *

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

(නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus)

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

ඉස්ලාම් ශිෂ්ටාචාරය II
இஸ்லாமிய நாகரிகம் II
Islamic Civilization II

47 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

※ பகுதி **I** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பகுதி **II** இலிருந்து **மூன்று** வினாக்களையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

**1.** (i) ஹதீஸ் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சட்ட மூலாதாரம் என்பதற்கு அல்-குர்ஆனிலிருந்து **இரண்டு** ஆதாரங்களைத் தருக.

(ii) ஒரு ஹதீஸ் நிராகரிக்கப்படுவதற்கு அடிப்படையாக அமையும் காரணிகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iii) இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்கள் தோற்றம் பெற்றமைக்கான காரணங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(iv) முதவாதிர், ஆஹாத் எனும் ஹதீஸ் பிரிவுகளைச் சுருக்கமாக விபரிக்குக.

(v) ஹதீஸ் கலை வளர்ச்சிக்கு இமாம் புஹாரி (ரஹ்) அவர்கள் வழங்கிய பங்களிப்புகளை விளக்குக.

(4× 5 =20 புள்ளிகள்)

**2.** (i) கிலாபதுர் ராஷிதாவின் முதலிரு கலீபாக்களும் தெரிவுசெய்யப்பட்ட முறைகளைக் குறிப்பிடுக.

(ii) கலீபா அபூ பக்ர் (ரழி) அவர்கள் கிலாபத்தைப் பொறுப்பேற்றதைத் தொடர்ந்து ஆற்றிய உரையைச் சுருக்கமாக முன்வைக்குக.

(iii) கலீபா உமர் (ரழி) அவர்கள் காலத்தில் ஏற்பட்ட சாம்ராஜ்யப் பரவலாக்கம் பற்றித் தெளிவுபடுத்துக.

(iv) உமையாக் கலீபாக்கள் நாட்டின் நிர்வாகத்தில் ஏற்படுத்திய மாற்றங்கள் **நான்கினை** விபரிக்குக.

(v) கலீபா அப்துல் மலிக் உமையா கிலாபத்தை ஸ்திரப்படுத்துவதற்கு வழங்கிய பங்களிப்பை மதிப்பிடுக

(4× 5 =20 புள்ளிகள்)

**3.** (i) முஸ்லிம்கள் இசைத்துறைக்கு அறிமுகப்படுத்திய இசைக்கருவிகள் **நான்கினைக்** குறிப்பிடுக.

(ii) இஸ்லாத்தில் இசை அனுமதிக்கப்பட்டதா? விபரிக்குக.

(iii) உமையா, அப்பாஸிய ஆட்சிக் காலங்களில் நிர்மாணிக்கப்பட்ட **இரண்டு** கோட்டைகள் பற்றி விபரிக்குக.

(iv) முஸ்லிம்கள் எழுத்தணிக் கலையில் ஆர்வம் காட்டுவதற்குத் தூண்டுதலாக இருந்த காரணிகள் **இரண்டை** விளக்குக.

(v) அறபு எழுத்தணி வகைகளுள் அர்-ரிகா, அந்-நஸ்கு பற்றிச் சுருக்கமாக விளக்குக.

(4× 5 =20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி II

**4.** (i) மருத்துவத்துறையின் வளர்ச்சிக்கு முஸ்லிம் அறிஞர்களுள் இருவர் ஆற்றிய பங்களிப்பினை விபரிக்குக.

(ii) கலீபா ம.்.மூன் காலத்தில் வானியல்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியை தெளிவுபடுத்துக.

(10× 2 =20 புள்ளிகள்)

**5.** (i) இஸ்லாமிய கிலாபத்தில் கோத்திர முரண்பாடுகள் ஏற்படுத்திய பாதிப்புக்களை ஆராய்க.

(ii) சிலுவை யுத்தங்கள் இஸ்லாமிய உலகில் ஏற்படுத்திய தாக்கங்கள் பற்றி விபரிக்குக.

(10× 2 =20 புள்ளிகள்)

**6.** (i) மு.்.தஸிலா, அஷ்-அரிய்யா சிந்தனைகளுக்கிடையில் காணப்படும் வேறுபாடுகளை ஒப்பு நோக்கி ஆராய்க.

(ii) ஷீஆக்களின் உப பிரிவுகளான நுஸைரிகள், பாதினீக்கள் பற்றி தெளிவுபடுத்துக.

(10×2 =20 புள்ளிகள்)

**7.** (i) இலங்கையில் இஸ்லாத்தின் அறிமுகம் பற்றி ஆதாரபூர்வமாக விளக்குக.

(ii) இலங்கையைச் சர்வதேசத்துடன் தொடர்புபடுத்துவதில் முஸ்லிம்களின் பங்கினை விளக்குக.

(10× 2 =20 புள்ளிகள்)

**8.** (i) இறை சட்டத்துக்கும் மனித சட்டத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

(ii) குடும்ப உருவாக்கத்தில் ஆண், பெண் இருவரதும் உரிமைகள், கடமைகளை தெளிவுபடுத்துக.

(10× 2 =20 புள்ளிகள்)

* * *

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WIKI
Sri Lanka Biggest past papers Bank